மருத்துவக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை–10 அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை.மரு.ரா.நாராயணபாபு,எம்.டி., டி.சி.எச்.,

ந.க.எண்.45905/அந1(2)/2019 நாள். 19/03/2022

பொருள்: அலுவலக நடைமுறை – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.நா.திவாகரன்(த/பெ.(லேட்).R.நாகப்பன்) இளநிலை உதவியாளர், மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வழங்குவது – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை(நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய அரசாணைகள்.
2. அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.26.06.1995
3. அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.12.03.2007
4. அரசாணை (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.08.10.2007
5. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.23.01.2020
6. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.26.02.2021
7. அரசு கடித எண்.8775/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2) துறை, நாள்.16.03.2021
8. இவ்வியக்கக பணிஓதுக்கீடு ஆணை ந.க.எண்.79909/நி2/4/2018, நாள்.06.06.2019
9. இவ்வியக்கக பணிநியமன ஆணை ந.க.எண்.45905/அந1(2)/2019, நாள்.11.06.2019

*******

ஆணை:

செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டில் காவலராக (Watchman) பணியாற்றிய திரு.R.நாகப்பன் என்பவர் 07.06.2007 அன்று பணியிடை இறந்துள்ளார். இவர் அப்பணியில் பணிவரன்முறை செய்யப்பட்டவர் ஆவார். அவரின் பிறந்த தேதி 12.04.1957 ஆகும். அவர் தொடர்ந்து பணியிலிருந்திருப்பின் தனியரின் உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.04.2017 ஆகும். மேற்படி அரசு ஊழியர் இறந்ததைத் தொடர்ந்து, இறந்த அரசு ஊழியரின் மனைவி தனது மகனும் இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரருமான திரு.நா.திவாகரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி தனது 13.07.2009 நாளிட்ட கடிதத்தில் உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளார்.

2) மனுதாரர் திரு.நா.திவாகரன் என்பவரின் பிறந்த தேதி 17.09.1986 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17 (1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19,500-71,900/- நிலை-08 (Level-08) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு மருத்துவக் கல்வி இயக்ககத்தில், 04.07.2019 மு.ப. முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் இணைந்து பணிபுரிந்து வருகிறார்.

3) எனவே, பார்வை 6) மற்றும் (7)-ல் காணும் அரசாணைகளின் வழிகாட்டுதல்களின்படி கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.நா.திவாகரன், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிக பணியினை, தனியர் பணியில் இணைந்த நாளான 04.07.2019 மு.ப. முதல் வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். தனியர் தனது தகுதிகாண் பருவகாலத்தினை பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளில் இரண்டாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் நிறைவு செய்திட வேண்டும் எனவும், மேலும் தகுதிகாண் பருவத்தில் துறைத்தேர்வுகள் மற்றும் அரசுப் பணியாளர் அடிப்படை பயிற்சியினை முடிக்க வேண்டும் எனவும் இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

4) தனியரின் பணிவரன்முறை ஆணை வழங்குதல் குறித்த பதிவுகள் தனியரின் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டன எனச் சான்றளிக்கப்படுகிறது.

மரு.இரா.நாராயணபாபு
மருத்துவக் கல்வி இயக்குநர்

பெறுநர்:

1) திரு.நா.திவாகரன், இளநிலை உதவியாளர்,
மருத்துவக் கல்வி இயக்ககம்,
சென்னை-10

2) மாநில கணக்காயர், தேனாம்பேட்டை, சென்னை-18

3) சம்பளம் (ம) கணக்கு அலுவலர்(தெற்கு), சென்னை-15

நகல்:

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை-06
பணிப்பதிவேடு
இருப்புக்கோப்பு/உதிரி.

/உண்மை நகல்//அனுப்பப்படுகிறது/

மேலாளர்
21/3/22